# பதிவுத்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.க.அசோகன்.எம்.காம்.,<br>மாவட்டப்பதிவாளர்(நிருவாகம்),<br>(உபதுத நிலையில்),<br>தஞ்சாவூர். | சார்பதிவாளர்,<br>சார்பதிவாளர் அலுவலகம்,<br>கருந்தட்டான்குடி. |

**ந.க.எண்:2530/அ1/2020, நாள்.09.12.2020**

அம்மையீர்,

பொருள்:- பொதுப்பணி - தஞ்சாவூர் பதிவு மாவட்டம் - திருமதி.க.செல்வம் இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை செய்து - ஆணை பெறப்பட்டுள்ளது - தனியரது அசல் சான்றுகள் இத்துடன் இணைத்தனுப்பபடுகிறது -பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப கோருதல் - தொடர்பாக.

பார்வை:-
1. அரசாணை (3ப) எண் 38,வணிகவரி மற்றும் பதிவுத்(எம்2)துறை சென்னை நாள் 10.11.2020
2. பதிவுத்துறைத்தலைவர் சென்னை மே.எ.எண் 35615/கே2/2016-2 நாள்.18.11.2020.

*****

பொருளில் காணும் இனம் தொடர்பாக, பார்வை(2)-ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் கடிதத்துடன் பார்வை (1)-ல் காணும் கடிதம் பெறப்பட்டுள்ளது. இத்துடன் திருமதி.க.செல்வம் இளநிலை உதவியாளரின் கீழ்க்கண்ட அசல் சான்றுகள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட சான்றுகள் கீழ்க்கண்டவாறு இத்துடன் இணைத்து அனுப்பபடுகிறது.பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதலும்,மேலும் கடிதத்தில் கோரியபடி,அன்னாரது பணிப்பதிவேட்டில் குறிப்பு மேற்கொள்ளவும் சார்பதிவாளர் கோரப்படுகிறார்.

மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்)
(உபதுத நிலையில்)
தஞ்சாவூர்.

9.12.20.

இணைப்பு

பார்வை(1) கடிதத்துடன் பெறப்பட்ட பார்வை(2)-இல் காணும் அரசாணை.

/பதிவஞ்சலில் /ஒப்புகை அட்டையுடன்/
**பதிவுத்துறை தலைவர் அலுவலகம்**
**சென்னை-600 028.**

<u>மே.எ.எண்.35615/கே2/2016-2  நாள்.18.11.2020</u>

அரசாணை (3ப) எண்.38, வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை, நாள்.10.11.2020 சார்பு செய்யப்படுகிறது.

திருமதி. க.செல்வம், இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள தஞ்சாவூர் மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப தஞ்சாவூர் மாவட்டபதிவாளர் கோரப்படுகிறார்.

ஒம்./-18.11.2020
பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

/ஆணையின்படி/

21/11/20
மாவட்ட பதிவாளர்

21/11

**பெறுநர்:**
திருமதி. க.செல்வம், இளநிலை உதவியாளர்.
(தஞ்சாவூர் மாவட்ட பதிவாளர் மூலம்)

**நகல்:**
1.மாவட்ட பதிவாளர், தஞ்சாவூர்.
(1.S.S.L.C.அசல் மதிப்பெண் சான்று - பதிவு எண்.234600/மார்ச் 1995.
2.மாற்றுச் சான்று (T.C.)
3.சாதிச் சான்று.
4.B.Ed.,- Degree சான்று- பதிவு எண்.1160110BD086/மே2011
மற்றும் Dec.2011)
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
3.முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1

Indnt. copy

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திருமதி.க.செல்வம் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2) துறை

அரசாணை (3ப) எண்.38

நாள் 10.11.2020
சார்வரி, ஐப்பசி–25
திருவள்ளுவர் ஆண்டு–2051.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018
2. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/2018–3, நாள் 01.10.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ) துறை, நாள் 23.01.2020.
4. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.35615/கே2/2016, நாள் 07.010.2020.

******

**ஆணை:-**

பதிவுத்துறையில், திருச்சி பதிவு மாவட்டம், காட்டுப்புத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 11.09.2015 அன்று காலமான திரு.செ.கண்ணதாசன் என்பவரின் மனைவி திருமதி.க.செல்வம், தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 14.11.2016–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திருமதி.க.செல்வம் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திருமதி.க.செல்வம், 14.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திருமதி.க.செல்வம், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப் படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

## தஞ்சாவூர் மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) (உ.ப.து.த நிலை) அவர்களின் நடவடிக்கைகள், பிறப்பிப்பவர்- திரு.க.அசோகன் எம்.காம்., செ.மு.எண்.3719/அ1/2021 நாள்.14.12.2021.

பொருள்: பயிற்சி - அரசுஅலுவலர் பயிற்சி நிலையம், பவானி சாகர் - தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் 17.12.2021 முதல் 04.02.2022 வரை உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கான 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை:
1. பதிவுத்துறைத்தலைவர், சென்னை எண்.49122/கே2/2021 நாள்.13.12.2021.
2. முதல்வர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானிசாகர் ந.க.எண்.அ5/4893/2021 நாள்.08.12.2021 மற்றும் 09.12.2021.

*****

**ஆணை:-**

பார்வை(1)-இல் காணும் பதிவுத்துறைத்தலைவர் கடிதப்படி தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் 17.12.2021 முதல் 04.02.2022 வரை 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியில் கீழ்க்கண்ட பணியாளர்கள் கலந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | பெயர் | பதவி | பணிபுரியும் அலுவலகம் | பகராண்மையில் பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி.த.ரோஸி | உதவியாளர் | மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) அலுவலகம் | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 2. | திரு.ம.பழனிச்சாமி | உதவியாளர் | மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) அலுவலகம் | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 3. | திரு.க.அதீஸ்வரன் | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம் திருக்காட்டுப்பள்ளி | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 4. | திரு.லோ.சுதாகர் | இளநிலை உதவியாளர் | அசல் பத்திரப்பிரிவு மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்) அலுவலகம் | - |
| 5. | திரு.மு.பிரகாஷ் | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுலவகம் திருவையாறு | மாவட்டப்பதிவா்ளர் (தணிக்கை) அலுவலகம் தஞ்சாவூர் |
| 6. | திருமதி.ப.கவிதா | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம் கருந்தட்டான்குடி | துணைப்பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் தஞ்சாவூர் |
| 7. | திரு.சு.சுரேஷ்பாபு | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம் வல்லம் | சார்பதிவாளர் அலுவலகம், திருக்காட்டுப்பள்ளி |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | திருமதி.க.செல்வம் | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம், கருந்தட்டான்குடி | - |
| 9. | செல்வி.தாரா | இளநிலை உதவியாளர் | சார்பதிவாளர் அலுவலகம், திருவையாறு | - |

மேற்குறிப்பிட்ட நபர்கள் 16.12.2021 முற்பகல் 10.00 மணிக்குள் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பொறியியல் கல்லூரியில் சிறப்பு பயிற்சி மையத்தை சென்றடையும் வண்ணம் பணியிலிருந்து விடுவிக்குமாறும் இணைப்பில் கண்ட நடைமுறைகளை வழுவாது பின்பற்ற பயிற்சியாளர்களுக்கு அறிவுறுத்தவும் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இத்துடன் பார்வையில் காணும் கடிதநகல் அனுப்பிவைக்கப்படுகிறது. அக்கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு செயல்பட பயிற்சியாளர்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

14/12/2021

மாவட்டப்பதிவாளர் (நிருவாகம்)
(உபதுத நிலை),
தஞ்சாவூர்

14.12.21 14.12.21

இணைப்பு
பார்வை(2)-இல் காணும் கடித நகல்.

பெறுநர்
1. சம்பந்தப்பட்ட உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்கள்.
   சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் மூலம்.
2. பதிவுத்துறைத்தலைவர், சென்னை.(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
3. துணைப்பதிவுத்துணைத்தலைவர், தஞ்சாவூர்(தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)
4. முதலவர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம்,
   பவானி சாகர்,
   ஈரோடு மாவட்டம் 638 451.